**பருத்தித்துறை பிரதேச சபை**

**யாழ்ப்பாணம் மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களினை சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 28 மார்ச் 2018 இல் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 30 செப்தெம்பர் 2018 இல் தவிசாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பருத்தித்துறை பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபையால் குத்தகை அடிப்படையில் பெறப்பட்ட பிக்கப் வாகனமொன்று சபைக்குரித்தற்றதாகக் காணப்பட்டது. எவ்வாறாயினும் அதன் பெறுமதி ரூபா 6,390,000 நிதிக்கூற்றுக்களுக்கு கொண்டு வரப்பட்டுள்ளமையினால் மோட்டார் வாகனங்களின் பெறுமதி மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் கூடுதலாகக் காட்டப்பட்டுள்ளது.

(ஆ) சபைக்கு நன்கொடையாக வழங்கப்பட்ட கழிவுறுஞ்சி வாகனம் சபைக்குரித்தாக்கப்பட்டிருக்கவில்லை. ஆயினும் அவற்றின் பெறுமதி ரூபா 1,881,900 கடந்த 03 ஆண்டுகளாக நிதிக்கூற்றுக்களுக்கு கொண்டுவரப்பட்டுள்ளமையினால் மோட்டார் வாகனங்களின் பெறுமதி மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் கூடுதலாகக் காட்டப்பட்டுள்ளது.

(இ) சபைக்குரித்தான தண்ணீர் பவுசரொன்றின் பெறுமதி மதிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களுக்கு கொண்டுவரப்படாமையினால் மோட்டார் வாகனங்களின் பெறுமதி மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் குறைவாகக் காட்டப்பட்டுள்ளது.

### 1.3.3 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள்பிரமாணங்கள் முகாமைத்துவதீர்மானங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசாங்கத்தின் நிதி ஒழுங்கு விதிகள் | | |
| (i) நிதி ஒழுங்கு விதி 371 | 11,405 | வாகனத்திருத்தத்திற்காக சேவை வழங்குனர் ஒருவரிற்கு வழங்கப்பட்ட முற்பணம் கடந்த இரு ஆண்டுகளாக தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ii) நிதி ஒழுங்கு விதி 571 | 2,214,826 | இருபத்தாறு வகையான காலம் கடந்த வைப்புக்கள் தொடர்பில் கடந்த 2 தொடக்கம் 12 ஆண்டுகளாக சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ஆ) அரசாங்கத்தின் நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு சுற்றுநிருபம் 29 திசெம்பர் 2016 இன் 30 / 2016 ஆம் இலக்கம் | | சபையின் 03 வாகனங்களிற்கு ஒரு வருடத்திற்கு மேலாக எரிபொருள் நுகர்வுப் பரீட்சிப்பு மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. |
| (இ) வடக்கு மாகாண நிதி சுற்றுநிருபம் 07 மார்ச் 2017 இன் PF/01/2017 ஆம் இலக்கம். | | 05 உத்தியோகத்தர்களால் பிணைப் பணம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமானம் அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டின் ரூபா 30,645,168 தொகையான மீண்டுவரும்

செலவினத்திலும் கூடிய வருமானத்துடன் ஒப்பிடுகையில் ரூபா 24,798,273 தொகையாக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம்,உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரிகள் | 60,000 | - | 79,087 | 958,126 | 60,000 | - | 79,087 | 919,487 |
| (ii) | வாடகைகள் | 5,510,000 | - | 5,752,538 | 121,709 | 6,040,000 | - | 4,412,936 | 117,309 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 1,440,000 | - | 1,119,254 | - | 1,170,000 | - | 1,264,442 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 27,275,000 | - | 26,517,276 | | 18,775,000 | - | 31,888,629 | - |
| | | 34,285,000 | - | 33,468,155 | 1,079,835 | 26,045,000 | - | 37,645,094 | 1,036,796 |

(ஆ) சபையினால் வீதவரிகள் சேகரிப்பின் போது பட்டியல்கள் விநியோகிக்கப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டதுடன் நிலுவைகளானவை மதிப்பிடப்பட்ட வருமானத்திற்கும் சேகரிக்கப்பட்ட வருமானத்திற்கும் இடையிலான வேறுபாட்டின் அடிப்படையில் திரண்டு வந்திருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

### 2.2.2 வீதவரிகள்

**வீதங்கள்**

கூட்டுமொத்தம் ரூபா 958,126 பெறுமதியான வீதங்களினை அறவிடுவதற்கு கடந்த 01 தொடக்கம் 23 ஆண்டுகளாக சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 வாடகைகள்

**வியாபாரங்களின் உரிமைத்துவம் மீதான குத்தகை**

கடந்த 03 தொடக்கம் 09 ஆண்டுகளாக நிலுவையிலிருந்த குத்தகைகள் மற்றும் தண்டம் கூட்டுமொத்தம் ரூபா 105,740 தொடர்பில் சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.4 அனுமதிப்பத்திரக் கட்டணம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

**(அ) வியாபார அனுமதிப்பத்திரங்கள்**

வியாபார அனுமதிப்பத்திர கட்டண அறவீட்டாளர் விபரம் ஏடுகளில் பதிவு செய்யப்படாது அறவிடும்போது மட்டுமே வருமானமாக கணக்கிடப்படுவதினால் வருமதியான வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணங்களின் தொகை கணக்கிடப்பட்டு நிதிக்கூற்றுக்களுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) தொழில்சார் அனுமதிப்பத்திரங்கள்**

சபையின் எல்லைக்குட்பட்ட வெற்றிலைக்கேணி , நாகர் கோவில் தெற்கு பகுதிகளில் நிர்மாணிக்கப்பட்ட டயலொக் தொலைத் தொடர்பு கோபுரங்களின் அனுமதிப்பத்திரக்கட்டணங்களும் நிர்மாணித்தல் கட்டணங்களும் அறவிடப்பட்டிருக்க ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் சபையினால் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.5 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக்கட்டணங்கள்**

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வடக்கு மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்து ரூபா 2,187,199 தொகையான நீதிமன்ற தண்டப்பணம் முத்திரைக் கட்டணங்கள் மற்றும் ரூபா 5,487,758 தொகையான நீதிமன்ற தண்டப்பணம் தொடர்ந்தும் பெறப்பட வேண்டியிருந்தன.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

**(அ) செயற்பாடுகளின் செயலாற்றலின் தாமதங்கள்**

நேர் முன்னைய ஆண்டில் ஒப்பந்தக்காரரொருவருக்கு வழங்கப்பட்டிருந்த கூட்டுமொத்தம் ரூபா 9,202,900 ஒப்பந்தக் கிரயமுடைய சபையின் தலைமையலுவலகக் கட்டட நிர்மாண வேலைகள் 07 மே 2018 இல் முடிவுறுத்தப்பட வேண்டியிருந்த போதிலும் நாளதுவரை முடிவுறுத்தப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் 03 கால நீடிப்புக்கள் வழங்கப்பட்டு கூட்டுமொத்தம் ரூபா 3,139,701 ஒப்பந்தகாரருக்குச் செலுத்தப்பட்டிருந்தது.

**(ஆ) திண்மக்கழிவு முகாமைத்துவம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) திண்மக்கழிவுகள் குவிக்கப்பட்டு தேசிய கொள்கைக்கு முரணாக தீ மூட்டி எரிக்கப்பட்டிருந்தன.

(ii) திண்மக்கழிவுகள் அகற்றப்படும் இடங்களில் கொசுக்கள், நுளம்புகள் பரவுவதனை தடுப்பதற்காக கொசு எண்ணெய் அடித்தல் மற்றும் துர்நாற்றத்தைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) சபையினால் 34 மயானங்களிற்கான மயான வரி அறவிடப்பட்டிருக்க ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2 மனித வளங்கள் முகாமைத்துவம்

சபையானது உரியவாறு மனித வளத்தைப் பெற்று ஈடுபடுத்தாமையினால் அத்தகைய 13 மனித வளங்களினால் நிறைவேற்றப்பட வேண்டிய சேவைகள் தாமதமடைந்திருந்தன.

### 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ஆதனவரி மீள்மதிப்பீடு கடந்த 47 ஆண்டுகளாக மேற்கொள்ளப்பட்டிருக்க சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபைக்குட்பட்ட 03 சந்தைக் கடைகளினை வாடகைக்கு வழங்க சபை தவறியிருந்தது.

(இ) சபையினால் 34 மயானங்களிற்கான மயான வரி அறவிடப்பட்டிருக்க ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 3.4.1 பராமரிப்பு மற்றும் திருத்தங்களினை மேற்கொள்ளத் தவறியமை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) முன்னைய ஆண்டுகளிலிருந்து 09 வாகனங்கள் பழுதடைந்து பயன்பாடின்றி வாகன தரிப்பிடத்தில் காணப்படுகின்றன.

(ஆ) மூன்று வாகனங்களின் ஓட்ட மானி வாசிப்பு பழுதடைந்த நிலையில் காணப்படுவதினால் கிலோ மீற்றருக்கான எரிபொருள் பயன்பாட்டினை அறியமுடியவில்லை.

#### 3.4.2 கையளிக்கப்படாத சொத்துக்கள்

சபையினால் பயன்படுத்தப்பட்டு வரும் உழவு இயந்திரம் , குடிநீர் தாங்கி , லான்ட் மாஸ்ரர் போன்ற 11 வாகனங்கள் சபைக்குரித்தற்றனவாகக் காணப்பட்டன.

### 3.5 இனங்காணப்பட்ட நட்டம்

மந்திகை சந்தைக் கட்டடம் அமைப்பதற்காக ஒப்பந்தகாரருடன் 24 ஏப்ரல் 2013 ஆம் ஆண்டு ரூபா 18,300,000 ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டிருந்தபோதும் தொழில்நுட்ப முரண்பாடு காரணமாக ஒப்பந்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டது. இதனால் ஒப்பந்தகாரரால் நடுவர் மன்ற தீர்ப்பாயத்திடம் முறைப்பாடு செய்யப்பட்டு ரூபா 9,440,264 சபையினால் குறிப்பிட்ட ஒப்பந்தகாரருக்கு வழங்கப்பட்டது. இதில் ரூபா 5,976,572 பெறுமதிக்கே வேலை நிறைவேற்றப்பட்டிருந்ததுடன் தொடர் வேலைக்கான மூலப்பொருளாக ரூபா 1,315,512 தவிர்ந்த ரூபா 1,997,588 சபைக்கு ஏற்பட்ட இழப்பாக கணக்காய்வில் அவதானிக்கப்பட்டுள்ளது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீட்டு வருமானத்திற்கும் உண்மை வருமானத்திற்கும் இடையே ரூபா 19,087 தொடக்கம் ரூபா 6,813,704 அல்லது 32 சதவீதம் தொடக்கம் 18 சதவீதம் வரையான வேறுபாடுகளும் மதிப்பீட்டு செலவினம், உள்ளபடியான செலவினம் என்பவற்றுக்கிடையே ரூபா 66,306

தொடக்கம் ரூபா 7,113,195 அல்லது 41 சதவீதம் தொடக்கம் 72 சதவீதம் வரையான வேறுபாடுகளும் அவதானிக்கப்பட்டன.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

---

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் காலத்திற்கு காலம் சபையின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் | குறைபாடுகள் |
| --- | --- |
| கணக்கீடு | அளவுத்தாள் பதிவேடு, காணி விற்பனை வரிப் பதிவேடு என்பன பராமரிக்கத் தவறியமை. |